**சாட்சிகளின் வாக்குமூலம்.**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.

**அசல் வழக்கு எண்.370/1998**

| | | | |
|---|---|---|---|
| வாக்குமூலம் - பி.வா.சா.1 | | தொடங்கும் நேரம் : | 12.00 p.m. |
| | | முடிவுறும் நேரம் : | 12.07 p.m. |
| பெயர் | : பெருமாள் | மதம் | : |
| த/பெ. | : சாரங்கபாணி | தொழில் | : |
| கிராமம் | : வல்லம் | வயது | : |
| தாலுக்கா | : | நாள் | : **25-07-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு ஜூலை திங்கள் **25**ஆம் நாள் சாட்சியம்.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதியாவேன். எனது முதல் விசாரணைக்காக முதன்மை சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **05.06.1978** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்** | **பி.வா.சா.ஆ.1.** |
| **02.** | **16.12.1985** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **பி.வா.சா.ஆ.2.** |
| **03.** | **05.06.1996** | **தேதியிட்ட புதுமனை புகுவிழா பத்திரிக்கை- (வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** | **பி.வா.சா.ஆ.3.** |
| **04.** | **19.02.2021** | **தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது - அசல்.** | **பி.வா.சா.ஆ.4.** |
| **05.** | **10.09.1994** | **தேதியிட்ட வாதி பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.267) - அசல்.** | **பி.வா.சா.ஆ.5.** |

மேற்படி **பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4** வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய இடைநிலை மனு எண்.2/2024-ன்படி அனுமதிக்கப்பட்டு, அதன்படி குறியீடு செய்யப்பட்டது. **பி.வா.சா.ஆ.5** ஆவணம் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய இடைநிலை மனு எண்.3/2025-ன்படி அனுமதிக்கப்பட்டு, அதன்படி குறியீடு செய்யப்பட்டது. மேற்படி **பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5** வரையான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. தாவாவை தள்ளுபடி செய்யவேண்டுகிறேன்.

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.